# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.86/2016 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 03 (PW– 03 ) |
| பெயர் | :- | திருநாவுக்கரசு |
| தேதி | :- | 16–09–2025 |

**சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

நான் சொன்ன முகவரில் வசிக்கிறேன் என்று காட்ட நான் முகவரி அட்டை எதையும் தாக்கல் செய்யவில்லை. அழகேசன் கேட்டுக் -கொண்டதால் நான் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் நடைமுறையை சொல்லியுள்ளேன். அழகேசன் குடும்பத்தை பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான்.

பூபதி, சித்ரா ஆகியோர் தனியாக ஒரு வீட்டில் வசிக்கின்றனர் என்றால் சரிதான். சுப்புலட்சுமி, கலா, சாந்தா ஆகியோர் தனியாக ஒரு வீட்டில் வசிக்கின்றனர் என்றால் அதே வீட்டில் கீழே வசிக்கிறார். அழகேசன் மேலே வசிக்கிறார். அழகேசன் குடியிருக்கும் வீடு உள்ள இடத்தின் புல எண் எனக்கு தெரியாது. அந்த இடம் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. 01-ஆம் பிரதிவாதி சுப்புலட்சுமிக்கு சொந்தமான வீட்டில் முதல் மாடியில் அழகேசன் வசிக்கவில்லை என்றும் அவ்வாறு நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

வாதியின் சகோதரிகள் நால்வர். அவர்களுக்கு எந்தெந்த ஆண்டு திருமணம் நடந்தது என்று குறிப்பாக எனக்கு தெரியாது. ஒவ்வொரு சகோதரிக்கும் என்னென்ன, எவ்வளவு சீர்வரிசை செய்யப்பட்டது என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியாது.

சித்தையன் துணிக்கடை வைத்திருந்தாரா என்றால் ஆமாம். எந்த இடத்தில் என்ன பெயரில் கடை வைத்திருந்தார் என்று நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சித்தையன் 03 வீடுகள் மற்றும் காலிமனைகள் வாங்கினார் என்று சொல்லியுள்ளேன். எந்த ஆண்டு வாங்கினார் என்று எனக்கு தெரியாது. ஆனால் வாங்கிய இடங்கள் தெரியும். குமார் என்பவரிடம் ஒரு வீடும் சித்தையன் தன் சகோதரியிடம் ஒரு வீடும் சாந்தசிவம் என்பவரிடம் ஒரு வீடும் வாங்கினார். பத்திரங்களை நான் பார்த்துள்ளேன். நான் அந்த ஆவணங்களில் சான்றொப்பம் எதுவும் இடவில்லை. நான் சொன்ன ஆட்களிடம் சித்தையன் சொத்து எதுவும் வாங்கவில்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

அழகேசன் சொத்தில் பங்கு வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார். எத்தனை சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. அவற்றின் புல எண் எனக்கு தெரியாது. சித்தையன் இறந்த தேதி எனக்கு தெரியாது. சித்தையன் 03 ஆண்டுகளாக உடல்நிலை சரியில்லாமல் இருந்து இறந்தார் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கு விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் அழகேசன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 01-ஆம் பிரதிவாதி அவருடைய சொத்தில் வசிக்கிறார் என்றால்

சரியல்ல. 03-ஆம் பிரதிவாதி அவருடைய தகப்பனார் அறுதியாவண கொடையாக கொடுத்த சொத்தில் வசிக்கிறார் என்றால் சரியல்ல. 04, 05-ஆம் பிரதிவாதிகள் அவருடைய தகப்பனார் விருப்பாவண கொடையாக கொடுத்த சொத்தில் வசிக்கிறார் என்றால் சரியல்ல. கூட்டுக்குடும்பமாக நான் வசிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.